906

முதல் ஹிந்தி வாசக புஸ்தகம்

"எறும்பூரக் கற்குழியும்"

30 JUN 1920
MADRAS

சென்னை ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேலன்
பிரசார காரியாலயத்தார்
வெளியிட்டது.

சென்னை - இந்தியா அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

சித்தார்த்தி வருஷம்
வி. ஸ. கசுஎசு
1920

[தபால்கூலி பிரத்தியேகம்.

JB.
0152,6 (1)
N20
172683

IT2683
சென்னை-600 002

ஹிந்தி புஸ்தகங்கள்.

ஹிந்தி முதல் புஸ்தகம் ...	0	2	0
தமிழ் அர்த்தம்	0	2	6
தெலுங்கு அர்த்தம்	0	2	6
பாலவிநோதம் 2-வது பாகம் ...	0	3	0
ஷை 3-வது	0	6	0
ஹிந்தி வியாகரணம் (Grammar) ...	0	6	0
ஆரோக்கியதிக் தர்சனம் (மகாத்மா காந்தி எழுதியது)	0	8	0
பாலராமாயணம்	0	9	0
ஹிந்தி இங்கிலீஷ் அகராதி	3	0	0

ஹிந்தி ப்ரசார கார்யாலயம்
மைலாப்பூர், மதராஸ்.

முகவுரை

—:-:—

20 JUN 1920
MADRAS

இது 'ஹிந்தி' பாஷையின் முதற் புஸ்தகம் என்றதின் மொழிபெயர்ப்பு. இந்த முதற் புஸ்தகம் ஹிந்தியில் வெளியானதும் ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஜனங்கள் இந்தப் புஸ்தகத்தின் மொழி பெயர்ப்பு தமிழிலும் தெலுங்கிலும் வேணும் என்று கேட்க ஆரம்பித்தார்கள். இந்த வேண்டுகோளைப் பூர்த்திசெய்வதில் எங்களுக்கு மிகவும் ஸந்தோஷ முண்டாகின்றது. இந்த மொழி பெயர்ப்பின் ஸஹாயத்தினால் ஹிந்தி முதற் புஸ்தகம் படிக்கிறவர்களுக்கு மிகவும் ஸௌகரியமாயிருக்கு மென்பது எங்கள் அபிப்பிராயம்.

இந்த மாகாண நிவாஸிகளுக்கு ஹிந்திபாஷையைக் கற்பித்துக்கொடுக்க வேண்டுமென்று பிரயத்னம் செய்கிறவர்களை ஸந்தேஹத்துடன் பார்ப்பவர்கள் அநேகமாக யாருமே இருக்கமாட்டார்கள்.

இந்தப் பிரயத்னமானது, ஏதாவது ஒரு ஜாதியின் சுய நலத்துக் காகவாவது, அல்லது வேறு பாஷையின் விரோதத்திற் காகவாவது செய்யப்படவில்லை. இது, பாரத வர்ஷம் பூராவும் மாகாண பாஷைகளைத் தவிர, ஒரு பொதுவான பாஷை வேண்டியது ஆவசியமென த்ருடமாய்க் கருதுகிற ஜனங்களின், பிரயத்னம். பிராந்தீய பாஷைகளினால் மட்டும் திருப்தி யடைந்துகொண்டு சும்மா யிருப்பது தவறென்பது அவர்களின் அபிப்பிராயம். வெவ்வேறு மாகாண வாசிகள், ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்வதற்கு ஒரு பொது ஸாதனம் எவ்வளவு ஆவசியமாக இன்று காணப்படுகிறதோ

அவ்வளவு இதற்குமுன் ஒருபொழுதும் காணப்பட்டதில்லை. இங்கிலீஷ் பாஷை இதற்குச் சரியான ஸாதனமாகுமென்று மதிக்கிறவர்கள் மிகவும் சொற்பமாகவே இருக்கக்கூடும்.

ஹிந்திபாஷை நமது தேசத்தின் மூன்றில் இரண்டுபாகத்தில் பரவியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. சென்னை மாகாணத்திலும் எத்தனையோ விடங்களில் ஹிந்திபாஷை பேசப்பட்டு வருகிறது. அது அவ்வளவு சுத்தமல்ல. ஆகையால்தான் நமது தலைவர்கள் ஹிந்தியை நமது தேசத்து ஸாமான்ய (பொது) பாஷையாக மதிக்கிறார்கள். மற்ற எவ்வளவோ காரணங்களாலும் ஹிந்தியே நமது தேசத்துப் பொதுவான பாஷை யாவதற்கு யோக்கியமானது. அக்காரணங்களை இங்கு இடத்தின் சுருக்கத்தால் எழுத முடியவில்லை. நமது தேசத்துப் பாஷைகளுக்குள் எவ்வளவோ நெருங்கிய ஸம்பந்த மிருப்பதால் நாம் நம்முடைய ஸ்வயபாஷையைத் தவிர வேறு பாஷை படிப்பதில் புத்திக்கு ஒருபோதும் பாரமாகாது. இரண்டு பாஷை கற்றுக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு பாரதவாசியின் கடமை யாகும். முதலில் தன்னுடைய மாகாண அல்லது தாய்ப்பாஷை, இரண்டாவது ஹிந்தி. நம்முடைய தாய்ப் பாஷைகளுக்குத் தாயாகிய ஸம்ஸ்கிருதத்தின் மேல் யாருக்கு அபிமானம் உண்டோ அவர்கள் அவசியமாய் அதையும் கற்றுக் கொள்வார்கள். மேலும் யார் தங்கள் தேசத்துக்கு வெளியிலும் காரியம் செய்ய விரும்புகிறார்களோ அவர்கள் அவசியம் இங்கிலீஷ் பாஷையையும் கற்றுக் கொள்வார்கள். அவர்கள் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது பதிப்பின் முகவுரை

இவ்வளவு சீக்கிரத்தில் முதல்பதிப்பின் புஸ்தகங்கள் விற்றிருப்பதும் இன்னும் ஜனங்கள் புஸ்தகம் கேட்டுக்கொண்டிருப்பதுமே அவர்களுக்கு ஹிந்திபாஷை கற்றுக்கொள்ளுவதிலிருக்கும் ஊக்கத்தையும் உத்ஸாஹத்தையும் காண்பிக்கிறது. முதல்பதிப்பில் கவனக்குறைவால் சில பிழைகளிருந்தன. அதன் விஷயமாக சிலர் கடிதங்கள் எழுதி எங்கள்மேல் கிருபைசெய்திருக்கிறார்கள். இந்தப்பதிப்பில் அப்பிழைகளெல்லாவற்றையும் திருத்தியிருக்கிறோம். பிழைகளைக்காட்டி திருத்தச் சொன்னவர்களுக்கும் வந்தனமளிக்கிறோம். முதல் பதிப்பைக்காட்டிலும் இது சிறந்தது என்பது சொல்ல வேண்டியதில்லை. இப்பதிப்பில் ஹிந்தி உச்சாரத்தைப் பற்றியும் சில குறிப்புகள் எழுதியிருக்கிறோம். உர்து வார்த்தைகளின் உச்சாரத்தை தமிழில் ஸரியாய் எழுதமுடியாததுடற்றி வருத்தமடைகின்றோம். ஸம்ஸ்கிருதத்திற்கும் ஹிந்திக்கும் லிபி ஒன்றே இருந்தாலும் சற்று வித்தியாஸமிருக்கிறபடியால் ஜனங்களை அதை கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம், இந்த ஸமயம் காகிதவிலையும், அச்சுக்கூலியும் முன்னைக்காட்டிலும் அதிகரித்திருப்பதால் விலையைசற்று கூட்டிவைக்க நேரிட்டது.

குறிப்பு:—ஸம்ஸ்கிருதம்போல எழுதப்பட்டிருந்தபோதிலும் வார்த்தைகளின் கடைசிஎழுத்து அகாரமாயிருந்தால் அதை ஸம்ஸ்கிருத ஹலந்தம்போல் உச்சரிக்கவும். உதாஹரணம் ‘தப, மன பலக’ என்று எழுதப்

பட்டிருந்தபோதிலும் தப், மன், பலக் என்று உச்சரிக்ககவேண்டும். சில வார்த்தைகளில் மத்தியிலுள்ள அகாரகுறிலும் ஹலந்தமாயிருக்கிறது. உதாஹரணம், ‘பலடன். தரகாரி, மலமல’ என்று எழுதப்பட்டிருந்தபோதிலும் ‘பல்டன், தர்காரி, மல்மல்’ என்று உச்சரிக்கவும்

क, ख, ग, வின்கீழ் புள்ளியிருப்பதை ஸாதாரண எழுத்துப்போல் உச்சரியாமல் அடித்தொண்டையிலிருந்து உச்சரிக்கவேண்டியிருக்கிறது. ज வின்கீழ் புள்ளியிருப்பதை இங்கிலீஷ் Z போல் உச்சரிக்கவும். வின்கீழ் புள்ளி யிருந்தால் அதை பூராட, போலில்லாமலும் ள போலில்லாமலும் இரண்டுக்கும் மத்தியாக நாக்கை சுழற்றி உச்சரிக்கவேண்டும். ट வின்கீழ் புள்ளியிருப்பதை வல்லினம்போல் உச்சரிக்கவும். இந்த விசேஷ உச்சாரத்தை ஜனங்கள் தங்கள் கிராமத்திலிருக்கும் மஹமதிய சகோதரர்களிட மிருந்தோ அல்லது ஹிந்தி பாடசாலை யிருக்கும் பட்டணங்களுக்குப் போகும்போது அங்குள்ள ஹிந்தி பிரசாரகரிடமிருந்தோ தெளிவாய் தெரிந்துகொள்ளவும். இதை நேரில் காதினல் கேட்டுத்தான் தெளிய முடியும். தமிழ் வார்த்தைகள் நீளமாயிருப்பதால் ஹிந்திக்கு ஸமமாக வரிவரியாய்ப் போட முடிய வில்லை. ஆகையால் ஹிந்திபுஸ்தகத்திலிருக்கிற பிரகாரம் வரிசைக்கிரமமாகப் போட்டிருப்பதாக கவனிக்கவும்.

சித்தார்த்தி௵ மாசி௴ 19௳. } ஹிந்தி பிரசார காரியாலயம்,
மைலாப்பூர்.

OFFICE OF THE ... 20 JUN 1920 ... MADRAS

௧-ம் பாடம்

இப்பொழுது
மா(மரம்-பழம்-காய்)
இவை
மேலும்-(உம்)

கரும்பு
எழுந்திரு
கம்பளம்
பாகம்-அம்சம்

ஒன்று
கண்
பனி

௨-ம் பாடம்

எப்பொழுது?
கப்பா
மெய்
ருசிபார்
காலடி; கால்
திரும்பிச் சொல்லுதல்
போதும்
பணம்

வீடு
கபடம்
எப்பொழுது
சீக்கிரம்
பழம்
சிறப்பு
இது-இந்த
மனம்

௩-ம் பாடம்.

விற்கிறது
அவன்-அவள்-அது-அந்த
கலப்பை
வரையில்
சமுசயம்-சங்கை
படி
ரசம்
சண்டையிடு

கஜம் (அளவு)
முண்டம்
ஜ்வரம்; தவம்
காடு
கை; செய்
போ
அபிப்ராயம்; கூடாது
கொக்கு, பிதற்று

சூடான	கண்ணிமை
பாதை	பிரகாசம்
மிருதுவான	சுலபமான
ஆல்	ரொக்கம்
பட்டணம்	எழுதுகோல் (பேனா)
அரண்மனை	சமாசாரம்
தங்கு, இரு	கஸர் - குறைவு
இடம்	விஷம்

௩-ம் பாடம்.

ஜலத்தை நிறப்பு இதைப்படி வீட்டில் இரு

வீட்டுக்குப்போ ரசத்தை ருசிபார் பழைத்தை ருசிபார்

பயப்படாதே பாதையில் நட நிறுத்து-போதும்

மெய்பேசு சமுசயப்படாதே

வேலை	கார்யம்	எழுது	தலை
தோல்	விசேஷமான	எள்ளு	மனம்
மைல்(தூர அளவு)	மீன்	நல்லது	சுகம்
சிப்பி	கற்றுக்கொள்	அதிகாலை	போகம்
பாலம்	பட்டணம்	திருடன்	காயம்
ரோஜா புஷ்பம் }	கெட்டுப்போன	ஆனந்தம்	மரணம்
		சேனை	ஷோக்
பால்	அறுகம்புல்	கூட-சேர்க்கை	சத்புருஷன்
பொய்	தொங்குகிறது	ஏழை	வர்ணம்
கூப்பிடுதல்	ஆதாரம்	உள்ளே	
ஆபில்பழம்	சேர் (அளவு)	புல்	
எருது	விரோதம்-வைரம்.		

௫-ம் பாடம்.

தகப்பனுடைய சகோதரன் }	இறுக்கமாய் / நெருக்கமாய் }	இலந்தைப் பழம்
		ஒற்றுமை
மாமன்	இரவு	வேஷம்
கறுப்பான	வமிசம்	உயர்ந்த
(புஷ்ப) மாலை	அன்னம்	வால்
நக்ஷத்திரம்	சந்தடியில்லாமல்	மீசை
பொன், தங்க	கொஞ்சம்	துதிக்கை
செம்பு	தூசி	ஊது
சிறிய	புஷ்பம்	நீந்து
ஜாதி	வீரன்; சூரன்	கால்
காகம்	குளிர்ந்த	இம்மாதிரி
திக்கு	கொடி	எருது
நாள்	கலகம்	பைஸா
அழிந்துபோக,	அச்சு	கத்தரி
கூட்டம்	குறிப்பு	எருமை
கூச்சல்	ஒன்று	அட்டை
கூட	தேசம்	கோந்து
		அலகு, மூக்கு

௬-ம் பாடம்.

கண்மை	நினைத்தல்	ஷர்பத்
காகிதம்	கேட்டல்	மல் மல்
கடித்தல்	சிரித்தல்	பட்டாளம்
விளையாடுதல்	சொல்லுதல்	குழப்பம்
வேலையில்லாத	அறை	கஸரத்
பயமில்லாத	ஜன்னல்	பக்கம்
மணல் அடர்ந்த	புஸ்தகம்	சுடுகாடு
மைதானம்	பாய்	கபடம்

தனிமையான-நிசப்தமான	ஸேனாதிபதி
விருத்தியடைக் கூடிய	கெட்டிக்காரனை
சிரித்த முகமுள்ள	சூடிகையுள்ள
சூரன்	மௌனமாய், சும்மா

௭-ம் பாடம்.

வேலையில்லாமல் உட்காராதே. ஒரு மைல் (தூரம்) நட. ஸமுத்ரம் வரையில் போ. பொய் சொல்லாதே. உன்னுடைய பெயரைச்சொல்லு. ஷர்பத் குடி. மிகவும் கஸரத் செய். தலையை தூக்கு. அதிகமாய்ப் பூப்பறி நக்ஷத்திரம் பிரகாசிக்கிறது. ஒரு தேசம் ஒரு வேஷம். (தேசம் தோறும் வேஷம் வேறு)

அ-ம்பாடம்.

பயமில்லாதவனாயிரு. மௌனமாய் உட்காராதே. அறையைச் சுத்தப்படுத்து. எவ்வளவு கெட்டிக்காரப் பையனாக இருக்கிறான். அவன் அதிகபிரஸன்ன முகத்தை உடையவனாக இருக்கிறான். இந்த மைதானம் மணல் பாங்கானது. ஜன்னலைத் திற. புஸ்தகத்தைக் கெடுக்காதே. சிவாஜி சூரத்தனமுடைய ஸேனாதிபதியா யிருந்தான். இந்தப் பையன் விருத்திக்கு வரக்கூடியவன். இடத்தைச் சுத்தமாய்வை. இந்தக் கறுப்பு எருமை என்னுடையது. அவன் தடபுடல் செய்து கொண்டிருக்கிறான். காகிதம் அதிக கிராக்கியாயிருக்கிறது. குரங்கின் வால் பெரியதாயிருக்கிறது. இந்தசஹர் (பட்டணம்) காலியாயிருக்கிறது. நாம் ஹிந்துஸ்தானிகள்.

கூ-ம் பாடம்

பாரததேசம்	தெரியும்	கனவான்
பஞ்சம், அகாலம்	திடுக்கிட்டு	கருத்து
எஜமான்	துன்பப்பட்டு	

ஸஹோதரி	கஷ்டம்	கச்சேரி
வெள்ளாடு	ஆவசியம்	அதிகாரம்
வேவுகாரன் } தூதன் }	வாள், கத்தி,	கதவு

பாரதம் நம்முடைய தேசம். சமுத்திரத்தின் கரைக்குப்போ. எனக்குத் தெரியும். அவன் யார்? பொய் வார்த்தை சொல்லுதல் பாபம், தித்திப்பான பால்குடியும். அவன் வேவுகாரன். என்னுடைய எஜமானன் வந்தான். புஸ்தகம் படியும் நான் ரஸாயனம்கற்றுக்கொள்வேன். தூர திருஷ்டிக்கண்ணாடி கொண்டு வாரும். தகப்பனார் கச்சேரி (க்குப்)போனார்.

௰-ம் பாடம்.

தாங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? நான் ஸாவுக்கார் தெருவில் வசிக்கிறேன். அங்கிருந்து மின்சார (டிராம்) வண்டி எவ்வளவு தூரம்? என்னுடைய வீட்டிலிருந்து 200 கஜம் தூரமிருக்கும். பள்ளிக் கூடம் போவதற்கு எத்தனை பைஸா பிடிக்கிறது? நான் மூன்று பைஸா வாடகை கொடுக்கவேண்டியிருக்கிறது. நான் இன்று உங்களுடைய வீட்டுக்கு வருவேன். தாங்கள் ஸந்தோஷமாய் வரலாம்.

கூட்டெழுத்துக்கள்.

எந்த அக்ஷரங்களுக்குப் பின் இந்த | அடையாளம் இருக்கிறதோ அவற்றுக்குப் பாய்வாலே (காலுள்ள) எழுத்து என்று பெயர்.

थ. प. ग. त. य. இம்மாதிரி அக்ஷரங்களின் காலைத் தள்ளி அவைகள் முன் அக்ஷரங்களோடு சேர்க்கப் படுகின்றன.

त+थ=त्थ पत्थर

கல்	वालुका
பிரியம்	उज्जैनी
விபூதி-சாம்பல்	புகைக்கூண்டு
லக்ஷ்மணன்	ஞானம்

காலில்லாத அக்ஷரங்கள் क, ट, ड, द, ह, இம்மாதிரி ट+ठ=ट्ठ. சேர்க்கப்படுகின்றன.

புட்டம் (ப்ருஷ்ட பாகம்)	பெரும்பள்ளம்
சுத்தமான	சீக்கியர்; சிஷ்யன்
தாமரை, பத்மம்	பொறுக்கக்கூடாத

र விசேஷமாதிரி சேர்கிறது; எழுத்துக்குமுன்னே வரும்போது இந்த மாதிரி ரூபத்தோடு எழுத்தின் மேல் சேர்க்கப்படுகிறது. र+म=र्म

உஷ்ணமான	நரகம்

ஒரு எழுத்தின்பின் வருகிறபோது இம்மாதிரி ரூபத்தோடு அநேகமாய் எழுத்தின் அடியில் சேர்க்கப் படுகிறது.

म+र=म्र

உதாரணம்:—

வணக்கமுள்ள	டிராம்
கல்லறை	துவாரம்
குறில், குறுகிய	

கக-ம் பாடம்.

சமுத்திரம்	கிருஷ்ணன்	சிநேகிதன் (மித்ரன்)	உபாத்யாயர்
சூரியன்	ஸ்ரீராமன்	சத்துரு	கர்மவீரன்
புஸ்தகம்	பரம்பரை	தேகபயிற்சி	உழைப்பாளி (உத்யோகி)
கூர்மையான } தீக்ஷணமான }	ஈஸ்வரன்	சங்கம்	பாரதவர்ஷம்
தரிசனம்	உற்பத்தியான	மாணாக்கன் (வித்யார்த்தி)	மாகாணம் (பிராந்தம்)

கஉ-ம் பாடம்.

ஸ்ரீ ராமச்சந்திரன் சமுத்திரத்தில் பாலங்கட்டியிருந்தார்.

சூரிய பகவான் பிரதிதினம் கீழ்த் திசையில் தரிசனம் கொடுக்கிறார்.

சங்கத்தில் எல்லோரும் என்னுடைய சிநேகிதர்கள், ஒருவரும் விரோதியல்ல.

அந்த மாணாக்கன் அதிக உழைப்பாளி.

அவனுடைய புத்தியும் தீக்ஷணமானது.

நீங்கள் இன்றைக்குக் கஸரத் செய்தீர்களா ?

பாரத வர்ஷத்தில் பெரிய பெரிய வித்வான்களும் கர்மவீரர்களும் உண்டாயிருந்திருக்கிறார்கள்.

உபாத்தியார் வஸு அநேக புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய பிறப்பு மதுராபுரியில் உண்டாயிற்று.

சென்னை மாகாணத்தில் ஹிந்தி பாஷை சீக்கிரத்தில் பரவிவிடும்.

கரு-ம் பாடம்.

நீங்கள் எந்த மாகாணத்தில் வசிக்கிறவர்கள்?

என்னுடைய இருப்பிடம் ஐக்கியமாகாணம்.

உங்களுடைய பக்கத்தில் (மாகாணம்) பிரஸித்த நதிகள் எவை?

எங்களுடைய மாகாணத்து மிகவும் பிரஸித்த இரண்டு பெரிய நதிகள் ஸ்ரீ கங்கையும் ஸ்ரீ யமுனையுமாம்.

ஸ்ரீ கங்காநதிக்கரையில் என்ன பெரிய திருவிழா நடக்கிறது?

மாக (மாசி) மாஸத்தில் ஸ்ரீ பிரயாகையில் கங்கைக் கரையில் பெரிய திருவிழா நடக்கிறது; யாத்திரிகள் தூரதூரத்திலிருந்து வருகிறார்கள்.

அப்படித் திருவிழா ஸ்ரீ யமுனைக்கரையிலும் ஏதாவது நடக்கிறதா?

ஆம்; ஸ்ரீ யமுனைக்கரையில் ஸ்ராவண (ஆவணி) மாசத்தில் ஸ்ரீ பிருந்தாவனத்தில் பெரிய திருவிழா நடக்கிறது.

கசு-ம் பாடம்.

நேற்று நாங்கள் ஸ்டேஷனுக்கு மூன்றே முக்கால் மணிக்குப்போனோம்.

வண்டி வரவேண்டிய ஸமயம் அஞ்சே கால் மணி.

டிக்கட் வாங்குகிறவர்களின் கூட்டம் அதிகமிருந்தது.

இங்கு மங்கும் சுற்றுவதில் பதினைந்து நிமிஷம் போய்விட்டன.

கடியாரத்தைப் பார்த்தால் நாலு அடித்து இருபது நிமிஷங்களாயிருந்தன.

நான் ஒரு கூலிக்கு ஒன்றரையணுப் பைஸாக்கள் கொடுத்து டிக்கட் வாங்கி வரச்சொன்னேன்.

இதற்குள் நாலேமுக்கால் மணி ஆய்விட்டது.

அப்பொழுது வண்டியின் வழியை (வரவை எதிர்) பார்க்க ஆரம்பித்தோம். அடிக்கடி கடியாரத்தைப் பாாத்துக் கொண்டிருந்தோம். கடைசியில், ஐந்து அடித்து ஐந்து நிமிஷமானதும் வண்டிக்கு மணி அடித்தது.

எல்லாப் பிரயாணிகளும் தயாராய் விட்டார்கள்.

சரியாய் ஐந்தேகால் மணிக்கு வண்டி வந்து சேர்ந்தது.

நாங்களும் உட்கார்ந்து கொண்டோம்.

அஞ்சரை மணிக்கு வண்டி புறப்பட்டது; பப் பப் என்று செய்துக்கொண்டு இஞ்ஜின் புறப்பட்டது.

கரு-ம் பாடம்.

இன்றைக்கு எங்களுடைய பள்ளிக் கூடத்தில் கிரிக்கெட்மேச் (பந்தாட்டம்) நடந்தது.

நானும் நல்ல விளையாட்டுக்காரன். என்னை மேச்சில் அவசியம் சேர்ப்பார்கள் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன்.

ஆனால் எங்களுடைய கப் தான் பிள்ளைகளைக் கூப் பிட்டு "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று," இம்மா திரி பதினொரு பிள்ளைகளைத் தெரிந்தெடுத்த பொழுது, எனக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. கோபத்தினால் விம்மி விம்மி அழ ஆரம்பித்தேன்.

க-உ-ந-சரு ரு-எ-அ-கூ-ய

௧௬-ம் பாடம்.

ஒரு நாய் பாதையின் நடுவில் படுத்துக்கொண்டிரு ந்தது. போகிறவர், வருகிறவர்களுக்கு, அதனால் அதி கக் கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் ஒரு மனிதன் அந்த நாயைக் கேட் டான்:—நீ ஏன் பாதையில் படுத்துக் கொண்டிருக்கிறாய்?

அது ஜவாப் சொன்னது:—"நான் என்னுடைய புத்தியைச் செலவழித்து நல்லவர், கெட்டவர்களைத் தெரிந்து கொள்கிறேன்.

அந்த மனிதன் சொன்னதாவது:— "தரையில் படுத்துக்கொண்டிருக்கிற உனக்கு நல்லவர், கெட்டவர் களின் செய்தி எப்படித் தெரிகிறது?"

நாய் சொன்னதாவது:—"எவன் நல்லவனோ அவ ன் தன் காரியத்திலே கவனமாய்ப் போகிறான். எவன் கெட்டவனோ, அவன் என்னைப் பார்த்துக் கோபித்துக் கொள்ளுகிறான்; மேலும் சும்மா காலால் உதைத்துச் செல்கிறான். நல்லவர் கெட்டவர்களின் பரீட்சையின் இதுவே என்னுடைய வழி."

கஎ-ம் பாடம்.

கப்பல் வேலைக்காரனும் வியாபாரியும்.

ஒருநாள் ஒரு வியாபாரி ஒரு கப்பல் வேலைக்கார னை(ப் பார்த்துக்) கேட்டதாவது ; "அப்பா, உன் தகப்பன், பாட்டன், பூட்டன் இவர்கள் எல்லோரும் எங்கே மரித்தார்கள்"? கப்பல் வேலைக்காரன் பதில் சொன்னதாவது "சமுத்திரத்தில்". வியாபாரி ஆச் சரியமடைந்து கேட்டதாவது "நல்லது, அப்படியா ஞல் சமுத்திரத்தில் போக நீ பயப்படுகிறதில்லையா ? அதே கதி உனக்கும் உண்டாகாமலிருக்கட்டும். கப்பல் வேலைக்காரன் வணக்கத்துடன் சொன்னதாவது "இதை க்கொஞ்சம் சொல்லுங்கள். தங்களுடைய முன்னோர் களின் மரணம் எங்கே சம்பவித்தது". வியாபாரி புன் சிரிப்புடன் சொன்னதாவது "கட்டிலின்மேல்". வேலைக்காரன் கேட்டான். "அப்படியாயின் தாங் கள் கட்டிலின் மேல் உட்காரப் பயப்படுகிறீர்களா ?"

க அ-ம் பாடம்.

நீ இல்லாவிட்டால் உன் அப்பன்.

ஒரு நாள் ஒரு ஓநாய் ஏதோ ஒரு நதியின் கரை யில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. இதற்குள் ஒரு ஆட்டுக்குட்டியும் தண்ணீர் குடிக்க வந்தது. அதைப் பார்த்து ஓநாயின் வாயில் தண்ணீர் ஊறிற்று, அதைக் கொல்ல உபாயங்கள் யோசிக்க ஆரம்பித்தது. அது குட்டியிடம் சொல்லிற்று "அடே ! நீ ஏன் தண்ணீரைக் கலக்குகிறுய், நான் இங்கே தண்ணீர் குடித்துக்கொண்

டிருக்கிறேனே பார்க்கவில்லையோ? குட்டி ஜவாப் சொன்னதாவது, ஐயா "மஹாராஜ், தண்ணீரின்ஓட்டமோஎன் பக்கமிருக்கிறது, நல்லது, தங்களுடைய ஜலம் எப்படிக் கலங்கலாக முடியும் ?". இதைக்கேட்டு ஓநாய் சொல்லிற்று; "நல்லது அன்றைக்கு ஏன் என்புல்லை மேய்ந்தாய் ?" குட்டி சொல்லிற்று, "என்னுடைய பல்லே இன்னும் முளைக்க இல்லை. எப்படி, புல் மேய முடியும் ?" ஓநாய் கொஞ்சம் வெட்கமடைந்து கோபம் கொண்டு சொன்னதாவது "அடே துஷ்டா! சென்ற வருஷம் நீ ஏன் என்னைத்திட்டினாய் ?" குட்டி வணக்கத்துடன் சொல்லிற்று, "மஹாராஜ், அந்தஸமயம் நான் பிறக்கக்கூட இல்லையே." ஓநாய்க்கு அதைக் கடைசியில் கொல்ல வேண்டிய தீர்மானமிருந்ததே; ஆகையினாலே கோபத்துடன் சொல்லிற்று, "நீ இல்லாவிட்டால் உன் தகப்பன் கொடுத்திருப்பான்" (வைத்திருப்பான்), இதைச் சொல்லி அந்தக் குட்டியின்மேல் பாய்ந்து அதை உடனே கொன்று தின்றுவிட்டது.

கக-ம் பாடம்.

"எவனுடைய வேலையோ அவனுக்கே அது தகுந்தது".

ஒரு வண்ணானிடம் ஒரு நாய் இருந்தது. வீட்டைக் காப்பதற்காக அதை வளர்த்திருந்தான்; மேலும் துணிகளைச் சுமப்பதற்காக ஒரு கழுதையு மிருந்தது. "வண்ணானுடைய நாய் வீட்டுக்குமல்லதுறைக்கு மல்ல" என்று பழமொழி உண்டு. இப்படியே அந்த நாயின் நிலைமையு மிருந்தது. (பாவம்) அந்த

(எளிய) நாய்க்கு வயிறுநிறைய உணவு ஒருபொழுதும் கிடைப்பதில்லை.

ஒரு நாள், பகல் முழுவதும் (உழைத்து) அலுத்துப்போய், வண்ணான் துறையிலிருந்து வந்தான். ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான். அன்றைய தினம் நாய்க்கு உணவு கொடுக்க முற்றிலும் மறந்து போனான். அன்றிரவு வண்ணான் வீட்டில் கள்ளர்கள் நுழைந்தார்கள். நாய் பசியினால் வண்ணான் மீது அதிகக்கோபமா யிருந்தது. அது ஒன்றுஞ் சொல்லவில்லை, சும்மா படுத்துக் கிடந்தது.

அங்கே நின்றுகொண்டிருந்த கழுதை நாயிடம் சொன்னதாவது, "ஏ! அப்பா! குலைக்கவில்லையே என்ன? கள்ளர்கள் வந்திருக்கிறார்கள். குலைத்து வண்ணானை எழுப்பி விடு."

நாய் சொன்னதாவது, "உனக்கு என்ன அதைப் பற்றி? என்னுடைய வேலை இது நீ சும்மா நின்றுகொண்டிரு. வயிற்றில் சோறு இல்லை, எந்தப் பலத்தினால் குலைப்பேன்? நல்லதுதான், கள்ளர்கள் திருடிக்கொண்டு போவார்கள். எனக்கு என்ன".?

கழுதை சொன்னதாவது, "நீ குலைக்காவிட்டால் நானே வண்ணானை எழுப்பிவிடுகிறேன்."

நாய் சொன்னதாவது, "பார், மற்றவனுடைய வேலையில் கையிடுவது நல்லதில்லை. நீ யார் என் வேலையில் கையிடுகிறவன்?"

பாவம் எளிய கழுதை அதிக எஜமான விஸ்வாசம் உடையது. அதால் பொறுக்கமுடியவில்லை. அது வண்

ணனை எழுப்புவதற்காக அவனண்டையில் போய் வெகு உரத்த குரலுடன் "சிப்போங், சிப்போங்" என்று கத்த ஆரம்பித்தது. வண்ணான் நல்ல தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான், திடீரென்று ஏற்பட்ட கழுதையின் குரலினால் விழித்து, கோபங் கொண்டு தடியால், தொம் தொம் என்று அடிக்க ஆரம்பித்தான்.

அடித்து அடித்து கழுதையை அரை உயிராக்கி விட்டான்.

நாய் உட்கார்ந்து கொண்டு, புன்சிரிப்புடன் சொன்னதாவது.

"எது எவனுடைய வேலையோ அவனுக்கே அது தகுந்தது, மற்றவன் செய்தால் தடியடி."

"சிசு."

உ௰-ம் பாடம்.

லாலாஜியின் வேலைக்காரன்.

ஒரு லாலாஜி பெரும் பணக்காரனாயிருந்தான். அதிகமாக எழுதப் படிக்கவும் தெரிந்தவன். தேச பக்தியினுடையவும் வெளித்தோற்றம் கொஞ்சம் இருந்தது. சபை ஸங்கங்களில் அதிக முறுக்காய்ப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தான். ஆனால் பெரிய கஞ்சனாய் இருந்தான்.

அவனிடம் ஒரு வேலைக்காரனிருந்தான். அவன் அதிக வெள்ளை (கபடமற்றவன்) யாயும், ஸ்வாமி பக்தன் (எஜமான விஸ்வாஸி) ஆகவுமிருந்தான். ஆனால்

172633

புத்தியில் மந்தமானவன். இதில் பாவம், எளியவனுடைய குற்றம் ஒன்றும் இல்லை, அவன் இன்னும் நாட்டுப் புறத்தில் வசிக்கும் நாட்டுப் புறத்தானாகவே இருந்தான்.

லாலாஜி ஒருபோதும் கொஞ்சம் (கூட) கொடுக்கிறது வாங்குகிறது கிடையாது. கொடை என்ற பெயரிலிருந்தே அவருக்கு ஜ்வரம் வருவது வழக்கம். ஒரு சமயம் சில மித்திரர்களின் வேண்டுகோளினால் சந்தா எழுதும்படியாகவே நேரிட்டது.

ஜனங்கள் சந்தாவசூலிக்க வந்தார்கள், லாலாஜியோ அறைக்குள் போய் நுழைந்தார். வேலைக்காரனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது, “போ, லாலாஜி வீட்டில் இல்லைஎன்று சொல்லிவிடு” பாவம் (எளிய) வேலைக்காரன் இந்தக் கபடம் என்ன அறிவான்? அவன் சுபாவமாகப்போய் “லாலாஜி, அவர் வீட்டில் இல்லை என்று சொல்லுகிறார்” என்று சொல்லி விட்டான்.

JB
0152,6 (1)
311120

உக-ம் பாடம்.

வீர ஜடாயு.

ஸீதாதேவியின் ஆக்ஞைப்படி, லக்ஷ்மணர் ஸ்ரீ ராமரைத் தேடப் புறப்பட்டார். ஸீதாதேவி தனியாய் விட்டாள். ராவணன் இதுவே விரும்பிக்கொண்டிருந்தான். பிச்சைக்காரனுடைய வேஷந் தரித்துக்கொண்டு, அவன் ஸீதாதேவியிடம் வந்து பிக்ஷை கேட்டான். ஜனக குமாரிக்கு அவனுடைய கபடம் தெரியுமா

என்ன? பிக்ஷை போடுவதற்காக (பர்ணசாலை)க் குடிசை யிலிருந்து வெளியே வந்தாள். அந்தச் சமயம் ராவணன் அவளைப் பிடித்து இடுப்பில் எடுத்துக்கொண்டு ஓடினான்.

அந்தத் துஷ்ட ராக்ஷஸன் பாரத தேசத்து லக்ஷ்மியாம் ஸீதாதேவியைத் திருடிப்போய்க் கொண்டிருந்த பொழுது, அவனை ஜடாயூ வழியில் பார்த்தான். ஸீதையை ரட்சிப்பது தன்னுடைய கடமை என்று அவன் அறிந்தான். ராவணனிடம்போய் அவனைச் சண்டைக் கழைத்து ஜடாயு கூறியதாவது, "அடே நராதம! என் சரீரத்தில் பிராணன் உள்ளமட்டும் பாரத தேசத்து ராஜேஸ்வரியை சமுத்திரக்கரை தாண்டிக்கொண்டு போக முடியாது."

ராவணன் கோபத்தால் பொங்கினவனானான். ஜடாயூ அவனை எதிர்த்தான். இருவருக்கும் கோரயுத்தம் நடக்க ஆரம்பித்தது. ஜடாயூ பெரிய வீரன் தான், ஆனாலும், விருத்தாப்பியனான காரணத்தால் ராவணனைப்போல சரீரபலமும் யுத்த கௌசலமும் அவ்வளவு அவனிடத்தில் இல்லை. எவ்வளவோ மணிநேரம் சண்டை நடந்துகொண்டிருந்தது. கடைசியில் தன்னுடைய கடமையை நிறைவேற்றி ஜடாயூ வீரகதியை அடைந்தான்.

பாரத சந்தானங்களுக்கு ஜடாயூவின் உதாஹரணம் பின்பற்றக் கூடியதாம். அவன் பாரததேசத்து லக்ஷ்மியாம் ஸீதாதேவியின் ரக்ஷணையின் பொருட்டுத் தன்னுடைய பிராணனை அர்ப்பணம் செய்து விட்டான். இவ்வுலகில் இப்பேர்ப்பட்ட வீரர்களின் ஜன்மமே புகழுக்குரியதாகும்.

உஉ-ம் பாடம்.

நம்முடைய தேசம்.

இது நம்முடைய தேசம். இது நம்முடைய பிரியமுள்ள ஜன்ம பூமி. இதை அடிக்கடி நாம் நமஸ்கரிக்கிறோம். இது நமக்கு ஆஹாரம் கொடுக்கிறது. இதில் விளையும் தானியங்களாலே நமது தேகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கேதான் நம்முடைய பவித்திர தீர்த்த ஸ்தலங்க ளிருக்கின்றன. இங்கேதான் ரிஷி, முனி முதலியோர்கள் தவம் செய்து கொண்டிருந்தார்கள். ஸத்தியவாதி ஹரிஸ்சந்திர மஹாராஜா இங்கேதான் இருந்தார். பாலப்ரம்மச்சாரியான பீஷ்ம பிதாமகர் இந்த மாதாவின் மடியில் விளையாடினார். எப்படிப்பட்ட மானிட ரத்னங்கள் பிரியமான இந்தப் பாரத வர்ஷத்தில் உத்பவித்திருக்கிறார்கள். அவர்களுடைய கீர்த்தி நாலாபக்கங்களிலும் பரவிக் கொண்டிருக்கிறது. நம்முடைய தேசத்திலுள்ள ஒவ்வொரு மலையும் அவர்களுடைய பெருமையைப் பாடிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நதியும் அவர்களுடைய பவித்திரமான சரித்திரத்தை வருணித்துக் கொண்டிருக்கிறது. காடுகள் அவர்களின் விமல குணங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தேசத்திற் பிறப்பது பெரும்பாக்கியமே. நாம் இங்கே பிறந்ததைப் பற்றிப் பெருமை யடைகிறோம். நாம் நம்முடைய தேசத்திலுள்ள ஒவ்வொரு நதியையும், கால்வாயையும் காட்டையும், மலையையும் யாத்திரை ஸ்தலத்தையும், நேசிக்க வேண்டும். நாம் ஈஸ்வரனிடம் வேண்டிக் கொள்வது இதுவே. நம்மு

டைய இந்தத் தேசம் ஸதா சுகியாயிருக்கட்டும், இந்தத் தேசத்தில் இப்பொழுதுள்ள துக்கங்கள் எல்லாம் தூர விலகி விடட்டும். இது திரும்பவும் பிராசீன ருஷிகளின் காலத்து ஸ்வதந்தர பாரத வர்ஷமாக ஆகட்டும்.

உ௩-ம் பாடம்.

கோழை (சுயநலங் கோரு கிறவன்).

எவன் இவ்வுலகத்தில் எல்லாக் காரியங்களையும் சுயநலம் என்ற கஜக்கோலினால் அளக்கிறானோ, தன்னிடத்திலுள்ளதுபோலவே மற்றவர்களிடத்திலும் சுய நன்மை குடிகொண்டிருக்கிறது என்று எவன் எப்பொழுதும் பார்க்கிறானோ;

பிறர்க்குதவி என்ற பேச்சைக் கேட்ட மாத்திரத்திலேயே எவன் பயந்து நடுநடுங்குகிறானோ. எவன், ஸாது ஜனங்கள் எங்கு கூடுகிறார்களோ அங்கு ஒரு நாளும் போகிறதில்லையோ;

ஐயோ! இப்பேர்ப்பட்ட பயங்காளியால் (புருஷார்த்தம்) (ஜென்மம் எடுத்ததின் பயனாக) எக்காரியமாவது செய்ய முடியுமா? எந்த ஜாதியில் எல்லாமனிதர்களும் இப்படியிருக்கிறார்களோ, அந்த ஜாதி எப்படி கிருதார்த்தமடைவது? (காரிய சித்தி பெறுவது) " ஸ்ரீதர்பாடக்,

---

உச-ம் பாடம்.

ஸமயத்தின் நல்லுபயோகம்.

எப்பொழுதும் எல்லாக் காரியங்களையும் ஸமயத்திற் செய்ய வேண்டும். அதனால் நடத்தையின் பலம் (சரித்திர பலம்) அதிகரிக்கிறது. கெட்ட வழக்கங்கள்

திருந்துகின்றன. மனுஷ்யன் ஸமயத்தை உபயோகப் படுத்தக் கற்றுக் கொள்கிறான். சோம்பல் தூர ஓடி விடுவதுடன் சரீரத்தில் காரியசக்தி உண்டாகிறது. சூரி யோதயத்திற்கு முன்னே எழுந்திருந்து நம்முடைய காரியங்களை ஆரம்பித்து விடவேண்டும். போஜனத்துக் கும், ஒரு குறிப்பிட்ட ஸமயமிருப்பது மேலானது. இர வில் வெகுநேரம் வரையில் விழித்திருப்பது, ஹானிகர மானது. அநேகர் பகலில் வீண்வம்பு பேசி, இரவில் இர ண்டுமணி வரையில் விழிக்கிறார்கள். இப்படிச் செய் வது மிகவும் கெட்டது. காலத்திலிருந்து தகுந்த லாபம் எடுக்க வேண்டும். எவர்கள் நேரமில்லையென்று முறை யிடுகிறார்களோ, அவர்கள் ' தவருகச் சொல்கிறார்கள். உண்மை என்னவெனில், அவர்கள் வீணான விஷயங்க ளில் அதிக நேரமிழந்து விடுகிறார்கள். ஸமயத்தைச் சரியான வழியி லுபயோகித்தவர்களே இவ்வுலகில் பெரிய காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஸெகண்டும் விலையுடையது. அதை ஸரியாய் உபயோ கிக்கவேண்டும். எப்பொழுது ஸமயம் நமது கைவிட்டுப் போய்விடுகிறதோ பின்னர்த் தலையிலடித்துக் கொண்டு பஸ்சாத்தாபப்பட வேண்டி யிருக்கிறது. ஆனால், "பக்ஷி கள் வயலில் (தானியத்தை) கொத்திச் சாப்பிட்டபின் பஸ்சாத்தாபப் படுவதினால் என்ன பயன்."

உரு-ம் பாடம்.

அப்துல்காதர்.

அப்துல்காதர் தன் தாயாரின் செல்லப்பிள்ளை. அவன் தகப்பன் இறந்துபோய் விட்டான். ஆகையால் பா வம் அவனுக்குச் சிறு வயதிலேயே பணம் ஸம்பாதிக்க

வேண்டிய கவலை ஏற்பட்டது. அவனுடைய கிராமத்திலிருந்து வர்த்தகர்களின் கூட்டம் ஒன்று வியாபாரம் செய்வதற்காக பரதேசத்துக்குப் போய்க் கொண்டிருந்தது. அவன் தாயார் அவனையும் அக்கூட்டத்துடன் அனுப்புவதென்று தீர்மானித்தாள். புறப்படுகிற ஸமயம் வந்ததும் கண்களில் நீர்ததும்ப அவள் சொன்னதாவது:— குழந்தாய்! நீ எப்பொழுதும் உண்மை பேசவேண்டும். கடவுள்தான் உன்னைப்பாது காக்கிறவர். நான் நாற்பது தினர்களை (பார்ஸி நாணயம்) உன்னுடைய துணிக்குள் (வைத்து)த் தைத் திருக்கிறேன். நீ தூரதேசம் போகிறாய். ஆகையால் மறுபடியும் இந்த ஜன்மத்தில் ஒரு வேளை சந்திப்பு ஏற்படாது. ஆனால் நாம் அவசியம் இறைவன் தீர்ப்புச் சொல்லும் தினத்தில் சந்திப்போம்.''

பையன் பரதேசத்துக்குப் புறப்பட்டான். ஏழு எட்டுநாள் வரையில் ஒருவித ஸம்பவமுமில்லாமல் அவர்களுடைய பிரயாணம் கழிந்தது. ஒன்பதாம் நாள் அக்கூட்டத்தாரைக் கொள்ளைக்காரர்கள் வந்து வளைந்து கொண்டார்கள். திருடர்கள் எல்லா ஸாமான்களையும் கவர்ந்தபின்பு அப்துல்காதரின் முறை வந்தது. ஒரு திருடன் பையனிடம் கேட்டதாவது, "உன்னிடத்தில் எத்தனை ரூபாய்கள் இருக்கின்றன?

பையன் வெள்ளை (கபடமில்லாமல்) மனத்துடன் உத்தரம் சொன்னதாவது'' "என் துணிகளுக்குள் நாற்பது தினர்கள் தைக்கப்பட்டிருக்கின்றன.'' திருடன் சிரிக்க ஆரம்பித்தான். அவன் பையனுடைய வார்த்தையை நம்பவில்லை. பிறகு மற்றொரு திருடன் பைய

னை மிரட்டிக்கேட்டான், "ஸரியாய்ச் சொல்லு. உன்னிடம் எத்தனை ரூபாய்கள் இருக்கின்றன?" மறுபடியும் அந்த உத்தரத்தையே பையன் மெதுவாகச் சொன்னான். அந்தத் திருடனும் பையனுடைய வார்த்தையை நம்பவில்லை. அவன் தன்னுடைய தோழனிடம் சொன்னதாவது, "இந்தப் பையன் பெரிய சைத்தானா யிருக்கிறான். இவனைத் தலைவனிடம் கூட்டிக் கொண்டுபோ".

தலைவனிடம் அப்துல்காதர் போய்ச் சேர்ந்தவுடன், திருடர்கள் பையனுடைய விஷயத்தை அவனிடம் சொன்னார்கள். தலைவன் கோபம் நிறைந்த சொற்களால் பையனைக் கேட்டதாவது, "உண்மையைச் சொல்லு, உன்னிடம் எவ்வளவு ரூபா யிருக்கிறது? பையன் புன்சிரிப்புடன் சொன்னதாவது, "என்னிடம் ௪0 தீனார்கள் துணிக்குள் தைக்கப்பட்டிருக்கின்றன. உன் மனிதர்களிடம் நான் இதே பதில் சொன்னேன், ஆனால் அவர்கள் என் சொல்லை கவனிக்கவில்லை" தலைவன் தன் கூட்டாளிகளுக்கு பையனுடைய துணிகளைப் பிரித்துப் பார்க்கும்படி உத்தரவளித்தான். அப்துல்காதருடைய சொல் உண்மையாயிற்று. இதைப் பார்த்துக் கள்வர் தலைவன் அதிக ஆச்சரியமடைந்தான். அவன் பையனைப் பக்கத்தில் அழைத்து அதிகப் பிரியத்துடன் கேட்டான். "நீ எப்படி உண்மை பேசினாய்?" பையன் வெகு சாந்தத்துடன் உத்தரவளித்தான் "நான் வீட்டிலிருந்து புறப்பட்டபொழுது ஒருபொழுதும் பொய் பேசுகிறதில்லை யென்று என் தாய்

முன் சபதம் செய்தேன். தலைவன் சொன்னதாவது, “ பையா, இவ்வளவு சிறு வயதிலேயே நீ தாயாரின் சொற்களை இவ்வளவு மதிக்கிறாய்? நான் இவ்வளவு பெரியவனாயும் கடவுளின் ஆக்ஞைகளைக் கொஞ்சமுங் கவனிப்பதில்லை. நான் உன்னிடமிருந்து இன்று இந்தப் பாடம் படிக்கிறேன். உன் கையைக் கொடு, இன்று முதல் என் கெட்ட நடவடிக்கைகளை நான் விடுகிறதாக சபதம் செய்கிறேன்.” இந்த த்ருசியம் (காக்ஷி) தலைவனுடைய தோழர்களின்மேல் பெரும் பிரபாவத்தை உண்டு பண்ணிற்று (மனதிற் தாக்கியது), அவர்கள் அதிக வணக்குடன் தலைவனிடம் சொன்னார்கள். “ தாங்கள் இதுவரை கெட்ட நடத்தைகளில் எங்கள் தலைவராயிருந்திருக்கிறீர்கள். இப்பொழுது தயவுகூர்ந்து இந்த நல்வழியிலும் எங்களுடைய தலைவராக இருங்கள்.

எல்லோரும் கெட்ட வழியை விடுவதற்குச் சபதம் செய்தார்கள். அப்துல்காதருடைய பெயர் என்றென்றைக்கும் ஸ்மரிக்கக் கூடியதாயிற்று,

---

உகூ-ப் பாடம்.

ஒரு போது பாஷையின் லாபங்கள்.

மனிதனோடு மனிதன் கலப்பதற்கு மிகப் பெரிய ஸாதனம் பாஷைதான். நாம் ஒருவர் மற்றவருடைய பேச்சை அறிந்துகொள்ளாவிட்டால் நமக்குள் பிரியம் எப்படி ஏற்பட முடியும்? ஸமாஜத்தில் எத்தனை சண்டை சச்சரவுகள் பரவுகின்றனவோ அவை அவ்வளவுக்கும் ஒரு பெரிய காரணம் நமக்குள் ஒருவர் பேச்சை

மற்றவர் அறியாததே. இக்காரணத்தால்தான், ஒவ்வொரு நாகரீக தேசத்திலும் ஸமாஜங்களின் அமைப்புக்காக ஒரு பஷையைப் பரவச்செய்தல் முக்கியமாகக் கருதப் பட்டிருக்கின்றது. நாம் ஒரு சிறு உதஹரணங் கொடுத்து நம்முடைய விஷயத்தை ஸ்பஷ்டமாகச் செய்கிறோம். ஒரு பெரிய வீட்டில் வேறு வேறு பாஷைகள் பேசுகிற ஜனங்கள் குடியிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒரு அறையில் பஞ்ஜாபி, இரண்டாவதில் ஐக்கியமாகாண வாசி, மூன்றாவதில் பங்காலி, நான்காவதில் மஹாராஷ்டிரர், ஐந்தாவதில் குஜராத்தி, ஆறாவதில் மத்ராஸி, முதலிய வேறு வேறு பாஷை பேசுகிற ஜனங்கள் வசிக்கிறார்கள். பாதிராத்திரி வேளையில் அந்த வீட்டைத் திருடர்கள் வந்து வளைந்தார்கள். இப்போது ஐக்கியமாகாண வாசி "யார்எங்கே," என்று சொல்லுகிறான்; பங்காலி "எங்கே, எங்கே" என்று கூப்பாடு போடுகிறான்; மஹாராஷ்டிரன் "இங்கே, அங்கே" என்று கூச்சலிடுகிறான்; மத்ராஸி "இங்கே, அங்கே" என்கிறான்; குஜராத்தி கையை நெரித்துக்கொண்டு "ஶுஞ்சே! ஶுஞ்சே! என்கிறான். இந்தப் பிரகாரம் வெவ்வேறு பாஷை பேசுகிறவர்கள் வகையில்லாமல் சத்தம் போடுகிறார்கள். ஆனால் யாருக்கும் யாருடைய பேச்சும் தெரியாது. திருடர்கள் ஸாமான்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு போகிறார்கள்; இவர்கள் பாவம் முகத்தைப்பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். யோசிக்க வேண்டிய விஷயம் என்ன வென்றால் அவர்கள் ஒருவருடைய பாஷையை மற்றவர் அறிய முடிந்தால், எல்லோரும் சேர்ந்து திடர்களை உதைத்துத் துரத்தி யிருக்கலாம். ஆனால்

ஒரே அபிப்பிராயமும் பரஸ்பர இரக்கமும் இல்லாமல் இப்படி உண்டாவது கடினமானது. மேலும் அப்பேர்ப்பட்ட இரக்கம், ஒரு பாஷையில்லாமல் உண்டாக முடியாது.

உஎ-ம் பாடம்

ஸ்வயபாஷை

ஸ்வயபாஷையின் மேன்மையே எல்லா மேன்மைக்கும் காரணமா யிருக்கிறது. ஸ்வயபாஷையின் ஞானமில்லாமல் ஹ்ருதயத்தின் பீடை (துக்கம்) நீங்குகிறதில்லை. சஹோதாரா, இப்போது தாமதம் செய்யாதே. எழுந்திரு, தூக்கங்களைப் போக்கிவிடு. எது எல்லாவற்றிற்கும் முதற்காரணமானதோ (அதை) அந்த (நிஜ) ஸ்வயபாஷையை உன்னத நிலைக்குக் கொண்டுவா. பற்பல கலைகளையும் அளவில்லாத ஞானத்தையும் அநேக விதமான சாஸ்திரங்களையும் எல்லாத் தேசங்களிலிருந்தும் கொண்டுவந்து ஸ்வயபாஷையில் பரவச் செய். பிரயத்தனம் செய்து ஸ்வபாஷையை உலகத்தில் நடப்பாகச் செய். ராஜகார்யத்திலும், தர்பாரிலும் இந்த ரத்னத்தைப் பரவச்செய்.

உஅ-ம் பாடம்

தேச ஸேவை.

எவனுக்கு தேச ஸேவையில் பற்றுதலிருக்கிறதோ அந்த மனிதன் பாக்கியவான். மரணத்தின் வாயிலிருந்து தப்பிக்கக் கூடியவன் எவன்? இவ்வுலகிலுள்ள ஐஸ்வரியங்களை விட்டுப் போகாதவன் எவன்? எப்பொழுதும் இங்கேயே உட்கார்ந்து இருப்பவன் எவன்? ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் நாம் எல்

[stamp]

லோரும் ஒரே மார்க்கமாகத்தான் போக வேண்டும். இந்த (நாசமடையக்கூடிய) பாழும் உலகத்தில் எவனொருவன் தனதெல்லாவற்றையும் தேச ஸேவையில் செலவிடுகிறானோ அவனுடைய (ஜன்மம்) ஜீவன் புகழுக்குரியது. இப்படிப்பட்ட புருஷன் தன் ஜீவனை மாத்திரம் ஸபலமாகச் செய்கிறதில்லை; மேலும் மற்றவர்களுக்கும் வழி காண்பிக்கிறான். அவனுடைய ஜீவனுக்குள் ஒரு அற்புத சக்தி வந்துவிடுகிறது. அவன் வாயினின்று வெளிவரும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஜீவனை (உத்ஸாகத்தை)க் கொடுக்கிறது. அவன் பெயர் பரிசுத்தம் செய்யக்கூடியதாக ஆய்விடுகிறது. அவன் வாழ்நாளின் வரலாறு புத்தி புகட்டுவதாய் விடுகின்றது. அவனுடைய கீர்த்தி தன் தேசத்தில் மாத்திரமல்ல, வெகு தூரங்களிலுள்ள தீப தீபாந்தரங்களிலும், பரவி விடுகிறது. மனுஷ்ய ஜாதியே அவனை ஸம்மானம் செய்ய ஆரம்பிக்கிறது. உலக முழுவதும் இப்படிப்பட்ட மனிதனை ஹ்ருதய பூர்வமாய்க் கொண்டாடுகிறது. அவன் எங்கெங்கு போகிறானோ எங்கெங்கு தங்குகிறானோ அவ்விடமெல்லாம் அவனுடைய ஸ்பரிசத்தினாலே பவித்திரமாய் விடுகிறது. எவர்களிடம், அவன் கொஞ்ச நேரமாவது பேசுகிறானோ அவர்கள் அவனுடைய சங்கத்தினாலே கரையேறி விடுகிறார்கள்.

ஆஹா! தேச ஸேவையின் மஹிமை மிகவும் விசித்திரமானது. எந்த தேசத்தில் ரிஷி முனிகள் உக்கிரமான தபஸ் செய்திருக்கிறார்களோ, எந்த தேசத்தில் ப்ரகிருதிதன் முழுஸௌந்தர்யத்தையும் காண்பித்திருக்கின்றதோ, எங்குள்ள மலைகள், நதிகள், மரங்கள் எல்லாம்

தேசத்தின் மேன்மைக்குப் பிரமாணமா யிருக்கின்றனவோ, எந்த தேசத்தின் அணு அணுவாய்ப் பூமியானது மஹாத்மாக்களின் உதிரத்தால் தெளிக்கப் பெற்றதாக இருக்கின்றதோ, அப்படிப்பட்ட தேசத்தின் கைங்கரியம் ஏன் மோக்ஷத்தைத் தரக் கூடியதாக ஆகாது? இத்தகைய புண்ணிய தேசத்திற் பிறந்துங் கூட எவன் அதன் தாழ்ந்த நிலையை சீர்திருத்த முயற்சிசெய்யாம லிருக்கிறானோ அவன் வாழ்நாள் தன் தேசத்தின் பொருட்டு வீண் பாரமே யாம்.

உகூ-ம் பாடம்.

ஸத்தியம்.

எல்லா தர்மப் புஸ்தகங்களிலும் (மத ஸம்பந்தமான கிரந்தங்களிலும்) உண்மை பேசுவது சிரேஷ்டமாகக் கருதப்பட்டிருக்கிறது. ஹிந்து சாஸ்திரங்களோ உண்மைக்கு ஸமமாக வேறு எந்ததர்மத்தையும் மதிக்கிறது இல்லை. வித்தியார்த்திகளுக்கு ஆரம்பத்திலேயே உண்மை உரைப்பதற்கு உபதேசம் செய்யப்பட்டு வந்துள்ளது. இதே வாய்மையின் பலத்தாலே (உலகில்) ஸம்ஸாரத்தில் மஹா புருஷர்கள் பெரிய காரியம் செய்திருக் கிறார்கள். இதனால் நாமெல்லோரும் உண்மை பேசவேண்டும்.

மஹாத்மா கோக்கலே அவர்கள் நம்முடைய தேசத்து பூஜிக்கப்படும் தலைவராயிருந்திருக்கிறார், அவர் பாலியமுதற்கொண்டே ஸத்தியத்தின் பக்ஷத்தை சேர்ந்தவராயிருந்தார். அவருடைய உபாத்தியாயர், அவருடைய இந்த குணத்தின் காரணத்தால் (அவர்மேல்)

அதிகப் பிரஸன்னமா யிருந்துக்கொண் டிருந்தார். ஒரு தடவை வீட்டில் செய்வதற்காக ஒரு கடினமான கணக்குக் கொடுத்தார். கோக்கலே அவர்கள் ஏதோ மித்திரனிடம் கேட்டு, அந்தக் கேள்வியைச்செய்து (போட்டு) விட்டார். மறுநாள் வகுப்புக்குப் போன போது, கேள்விக்குச் சரியான உத்தரத்தைப்பார்த்து, இவர் பேரில் உபாத்தியாயர் அதிகப் பிரஸன்னமானார். வகுப்பில் ஒரு மாணுக்கனாலும் அந்தக் கேள்வியை போட முடியவில்லை. ஆனதால் உபாத்தியாயர், வகுப்பில் எல்லோருக்கும் முதலாக உட்காரும்படி கோக்கலேயிடம் சொன்னார். இதைக் கேட்டு கோக்கலே விம்மி விம்மி அழ ஆரம்பித்தார். உபாத்தியாயர், அழுவதற்குக் காரணம் கேட்டபொழுது, கோக்கலே சொன்னதாவது, " இந்தக் கேள்வியை நானாக செய்ய வில்லை; என்னுடைய மித்திரன் இதைச் செய்தார், ஆனதால் முதலில் உட்கார எனக்கு யாதொரு அதிகாரமுமில்லை" உபாத்தியாயர் அதிக ஸந்தோஷமடைந்தார். வித்தியார்த்திகளுக்குள்ளும் கோக்கலேயின் இந்த ஸத்தியபதத்தின் பிரபாவம் (மனதில்) பட்டது. மேலும் அந்த நாள் முதல் அவரை ஆதரவான திருஷ்டியுடன் நோக்க ஆரம்பித்தார்கள்.

" வாய்மையிற் சிறந்த தவம் வேறில்லை.

பொய்க்கிடான பாபமில்லை. எவனுடைய இருதயத்தில் உண்மை யிருக்கிறதோ, அவனுடைய நெஞ்சத்திலே கடவுளிருக்கிறார்" என்றது (கவியின் வாக்கு) உண்மையே.

கூ௰-ம் பாடம்.

ஈஸ்வர சந்திர வித்யாஸாகரர்.

மத்தியான வேளையாயிருந்தது. வெயில் அதிக உக்கிரமாய் அடித்துக் கொண்டிருந்தது. கல்கத்தாவிலிருந்து வரும் வண்டி ஸ்டேஷனுக்கு வந்தது. அதிலிருந்து இரண்டு பிரயாணிகள் இறங்கினார்கள். வாலிபன் ஒருவன் (கோட்) மேல்சட்டையும் கால்சட்டையும் போட்டுக்கொண்டிருந்தான். மற்றவன் மத்திய வயதுள்ளவன். பாதரட்சையில்லாமல், குடுத்துணியும், வேஷ்டியும் அணிந்தவனாயுமிருந்தான். வாலிபனுடைய கையில் ஒரு தூக்குப்பை இருந்தது. ஸ்டேஷனில் 'கூலி' 'கூலி' என்று கூப்பிட்டான்; ஆனால் அங்கே கூலி ஒருவனுமில்லை. வாலிபன் ஸ்டேஷன்மாஸ்டருடன் கூலிக்காகச் சண்டையிட்டான். இதைப்பார்த்து, மற்றொரு பிரயாணி சொன்னதாவது:—" நான் உங்களுடைய தூக்குப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு வருகிறேன்" வாலிபன் கர்வத்துடன் சொன்னதாவது, " நல்லது நாம் உங்களுக்குப் பூராக் கூலியும் கொடுப்போம்" வாலிபன் முன்னே முன்னே போனான், பின்னே பின்னே பையைத் தூக்கிக்கொண்டு மற்றவன் போய்க்கொண்டிருந்தான். வீடு சேர்ந்ததும் வாலிபன் பையை தூக்கினவனுக்குக் கூலிகொடுக்க விரும்பினான். ஆனால் அவன் எடுத்துக் கொள்ளவில்லை.

மறுநாள் பண்டித ஈஸ்வரசந்திர வித்தியாஸாகரருடைய வரவு கிராமத்தில் கோலாஹலமாயிருந்தது. அவருடைய வரவேற்புக்காக கிராமத்தார் எல்லோரும் ஒன்று கூடினார்கள். வாலிபனும் அங்கே போய்ச்

சேர்ந்தான். பார்த்தது என்னவென்றால், எந்த மனுஷ்யனுடைய கழுத்தில் புஷ்பமாலைகள் போடப்படுகின்றனவோ, எவருக்காக உபசரணை நடந்து கொண்டிருக்கிறதோ, அவரே மூட்டை தூக்கின பிரயாணி. வாலிபனுக்கு அதிக வெட்க முண்டாயிற்று. மேலும் தன்னுடைய கர்வத்தைப் பற்றிப் பச்சாத்தாபப்பட ஆரம்பித்தான். ஸபை முடிந்த பின்னர் அவன் வித்யாஸாகரர் அவர்களுடைய வீட்டுக்குப் போய் அவருடைய கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். மேல் சட்டையும், கால் சட்டையும் அணிவதனால் யாரும் பெரியவனாய் விடுகிறதில்லை என்று இன்றைக்கு அவனுக்குத் தெரியவந்தது. எவன் பெரிய காரியங்கள் செய்கிறானோ அவனே பெரியவன்.

———

௩௧-ம் பாடம்

குயில்.

இனிய குரலுடைய குயில் "கூ கூ" என்ற தொனியைப் பரவச் செய்கிறது. தலையையும் மூக்கையும் சாய்த்துக்கொண்டு மரக்கிளையின்மேல் உட்கார்ந்து பாடுகிறது. ஒரு நிமிஷம் ஒரு கிளையின்மே லுட்கார்ந்து அங்கிருந்து சட்டென்று பறந்துவிடுகின்றது. மரங்களுக்கிடையே சிரகையடித்துக்கொண்டு திரிந்து அதிக சஞ்சலத்தைக் காண்பிக்கிறது. கிளைக்குக்கிளை (உட்கார்ந்து)தன்னைமறந்த(குயில்)மதுரமான தொனியைப்பாடுகிறது. கறுப்பாயும் குரூபமாயும் இருந்தாலும், அது உலகில் ஜெகப்பியாரி (ஜனங்களால் பிரியப்படக் கூடியது) என்று சொல்லப்படுகிறது. இதனால் நாம் கற்றுக்கொள்ள வேண்டியதாவது:—எப்பொழுதும் இனிய சொல்

பேசவேண்டும். அதனால் எல்லோரும் நம்மீது அன்பு வைப்பார்கள். எல்லோரும் நம்மை தங்களுடைய பந்துக்களாகவும், ஸொந்தக்காரர்களாகவும் அறிவார்கள்.

௩௨-ம் பாடம்.

ஸுக்ராத் (ஸாகரட்டீஸ்).

ஸுக்ராத் என்பவர் யூனன் (கிரீக்க) தேசத்து மிகப் பெரிய தத்துவ சாஸ்திரி. அவர் தேசத்தின் நன்மையை அதிகமாய் நாடுகிறவர். தன்தேசத்தின் எந்தப் பழைய ஆசாரங்கள் (கொள்கை) ஜாதிக்கு ஹானிஉண்டு பண்ணிக்கொண்டிருந்தனவோ அவைகளின் கடும் பகையாளி. அவர் தன்னுடைய மதுரமொழியினலும், நல்லொழுக்கத்தின் பலத்தாலும், தேசத்து வாலிபர்களைத் தன் வசமாக்கிக் கொண்டார். அவருடைய பாடசாலைக்கு தூர தூரங்களிலிருந்து, வித்தியார்த்திகள் படிப்பதற்கு வந்துகொண்டிருந்தார்கள். மேலும் அவருடைய கொள்கைகளினல் லாபமடைந்து, அவற்றைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள். இந்தப் பிரகாரம் ஸுக்ராத்தினுடைய கீர்த்தி நாலா பக்கமும் பரவ ஆரம்பித்தது.

யூனன் தேசத்து அதிகாரிகளுக்கு ஸுக்ராத்தின் மீதுள்ள ஜனங்களின் அன்பு பிடிக்கவில்லை. அவர்கள் (ஸுக்ராத்துக்கு) பிராணசத்துருக்களாய் விட்டார்கள். அவர்கள் அவரைத் தண்டிக்க ஏதாவது சமயம் தேட ஆரம்பித்தார்கள். கடைசியாக அவர் மேல் வாலிபர்களைக் கெட்டவழியில் திருப்புகிற குற்றத்தைச் சாட்டினர்கள். சொல்லப்பட்டது என்னவென்றால்:— ஸுக்ராத் வாலிபர்களுக்குள் பழைய தேவி தேவர்களு

க்கு விரோதமான பேச்சை (எண்ணத்தை)ப் பரவச் செய்கிறார்." நியாயாலயத்துக்குமுன் ஸாக்ராத் அழைக்கப்பட்டார். ஸாக்ராத் சொன்னதாவது, "நான் ஸத்தியத்தை உபதேசம் செய்வதிலிருந்து விலக முடியாது" ஸாக்ராத்துக்கு விஷப்பேலா குடிக்கும்படியான தண்டனை விதிக்கப்பட்டது. சிரித்துக்கொண்டும், புன்னகை செய்து கொண்டும், அந்த வித்வான் விஷப் பியாலாவைக் குடித்துவிட்டார். தன் வித்தாந்தத்திற்காக தன்னுடைய பிராணனை அர்ப்பணம்செய்த திருஷ்டாந்தத்தை உலகத்தாருக்குக் காண்பித்தார். யூனன் ராஷ்டிரம் (கிரேக்க தேசம்) நசித்துப் போய்விட்டது. அந்த அதிகாரிகளும் மண்ணோடு சேர்ந்து விட்டார்கள்; ஆனால் ஸாக்ராத்தினுடைய பெயர் எக்காலத்தும் அழிவற்றதாய்விட்டது (அவர் அமரர் ஆனார்).

௩௩-ம் பாடம்.

இச்சா சக்தி.

நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அது ஆகக் கூடும். உம்மிடத்திலேயே ஸகல சக்திகளு மிருக்கின்றன. மனிதன் யோசனு சக்தியுள்ள ஜந்து. அவன் எப்படி நினைக்கிறானோ அப்படியே ஆகிறான். நீங்கள் ஏதாவது கஷ்டமான காரியத்தைச் செய்து விடுகிறதென்று த்ருட பிரதிக்ஞை செய்துவிட்டால் அந்த நேரத்திலேயே பாதி காரியம் முடிந்து விடுகிறது; மற்றப் பாதியை நீங்கள் சீக்கிரத்திலேயே செய்யலாம். நீங்கள்தானே "நான் இதைச் செய்ய முடியாது" என்றாவது "நான் இம்மாதிரி ஆக முடியாது" என்றாவது, எண்ணி

க்கொண்டால், ஸாக்ஷாத் பிரம்மாகூட உங்களுக்கு உத விசெய்யார். முதலில் தன்னிடத்தில் இருக்கும் மனச் சோர்வை விலக்குங்கள், நிராசை எனும் பேயை ஓட்டி விடுங்கள். உம்மிடமுள்ள ஆத்ம விஸ்வாஸத்தை விட, உம்முடைய ஜெயம் அதிகமாகாது. எவ்வளவு நம்பிக் கை உம்மிடத்தில் உமக்கு இருக்கிறதோ, அவ்வளவு பலம்தான் உமக்கு வேலைசெய்ய உண்டாகிறது. உம் முடைய ஜெயத்தின்மேல் உமக்குத் திடமான நம்பிக் கை எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுதுதான் நீர் உம்முடைய முழு பலத்தையும் உபயோகப்படுத்த முடியும். இரவும் பகலும் தன் எண்ணத்தையே கவ னிக்கவும். நின்றாலும் இருந்தாலும், நடந்து திரிந்தா லும், அதன்மேல் கவனம்செலுத்தும். மனதில் பயம் அல்லது ஸந்தேக எண்ணத்தை வைத்துக்கொண்டு, நீர் ஜெயமடைய முடயாது. உமது மனதின் செல்கிற வழி யை திருப்பும். அதை காரியஸித்தி யுண்டாகும் பக்கத்து க்குச் செலுத்தும் மனதாகிய அறையை, நம்பிக்கை, ஸந்தோஷம், காரியசித்தி, முதலிய சித்திரங்களால் அலங்கரியும். அப்படி யானால் ஜயம் (காரியஸித்தி) உம்முடைய பிடியிலிருக்கிறது. அது கைகட்டிக்கொ ண்டு உம் முன்னிலையில் நிற்கும். உலகம் உம்மை ஜயித் தவனுடையரூபத்தில் பார்க்கும்.

௩௪-ம் பாடம்.

ஸாஹஸம்.

(துணிவு)

இவ்வுலகம் துணிந்தவர்களுக்கே உடையது. பயந் தவர்கள் எப்பொழுதும் யோஜித்துக்கொண்டே இரு க்கிறார்கள். அவர்கள் (சும்மா) உட்கார்ந்து கொண்டு

ஸ்வப்பனம் காண்கிறார்கள். ஆனால் துணிவுள்ளவர்கள் வெற்றியடைந்து போகிறார்கள். தைரியமில்லாத யோக்யதை வீணானதே. ஜயம் துணிவின் புத்திரி. அது ஸதா துணிவுடைய புருஷன் கூடவே வசிக்கிறது. காரியத்தில் காலதாமசம் செய்பவர்கள் ஷேக்சில்லியைப்போல் (எள்ளுக் கணக்குப் பார்த்த பிரம்மச்சாரி போல) மனக்கொழுக்கட்டை தின்கிறார்கள் (மனோராஜ்யம் செய்கிறார்கள்). எவன் கர்ம வீரனோ, அவன் ஜயமடைகிறான்.

எவன் ஸாஹஸத்தை இழந்துவிட்டானோ, அவன் ஜயம் பெறுவதிலிருந்து கைகழுவி விட்டான். கோழை பயத்துக்கு எதிரே நடுங்க ஆரம்பிக்கிறான். துணிந்தவனுடைய ரத்தம் பயத்தைப் பார்த்து, உத்ஸாஹத்தால் நிரம்பி விடுகிறது. அவனுக்குள் புதிய ஜீவன் உண்டாகிறது. துணிவு இல்லாமல் பெரிய ஆக்ருதி (சரீரம்) என்ன உபயோகத்துக்காக? அதைக் கேவலம் பாரம் என்றே அறியுங்கள். உலகசரித்திரமானது, துணிந்த ஆண், பெண்களின் ஊக்கமுண்டாக்கும் கதைகளால் நிறைந்திருக்கிறது. அவைகளின் படிப்பினையினால் மற்றவர்களுக்கு புத்திமதி கிடைக்கிறது. (உதாஹரணம் கிடைக்கிறது). அந்த துணிவு யுத்த க்ஷேத்திரத்தில் மட்டும் காட்டப்படுகிறதில்லை. நம்முடைய நித்திய ஜீவனத்திலும் நாம் அதை உபயோகப்படுத்தலாம். கடினமான வேலையைச் செய்ய ஆரம்பிக்கும் பொழுது பயப்படக் கூடாது. அங்கேயே மனிதனுடைய பரீக்ஷையாகிறது. "நான் இன்னும் நிஸ்சயிக்கவில்லை" என்பது பலமின்மைக்கு அடையாளம். இக்காரணத்தினால் தான், நீங்கள் இன்று

வரையிலும், ஒன்றும் செய்ய முடியவில்லை. எவன் துணிந்தவனோ, அவனுக்கு தீர்மானம் செய்வதில் தாமசம் ஆவதில்லை. எப்போது நிஸ்சயம் செய்து விடுகிறானோ அப்போது வேலையில் முழுமனதுடன் இறங்குகிறான். உலகம் அவனைப்பார்த்து முதலில் ஆஸ்சர்யமடைகிறது. பின்னர் பூஜிக்க ஆரம்பிக்கிறது.

௩௫-ம பாடம்.

உலகில் சுகியார்? எவனுக்கு கொஞ்சம்கூட துக்கமில்லையோ, எவன் பகவானிடத்தில் லயித்திருக்கிறானோ அவனே உலகில் ஸுகி. (௧)

ஈஸ்வர சிருஷ்டியின் மத்தியில் துக்கியென்று எவனை சொல்லலாம்? எந்தநீசன் பிறருடையஅபிவிருத்தியைக் கண்டு மனம் எரிகிறானோ, அவனே துக்கியாயிருக்கிறான். (௨)

உலகில் தனவான் எவன்? எவனுடைய மனம் சஞ்சலமடைகிறதில்லையோ, எவன் மனதில் சந்தோஷம் வைக்கிறானோ அவனே தனிகர்களில் ராஜா (சிரேஷ்டமானவன்). (௩)

எவனை தரித்திரி என்று சொல்லலாம்? என்று என் பெயரில் பிரியம் வைத்துச் சொல்லு; எவனுக்கு தனத்தில் பேராசை அதிகமாய் இருக்கிறதோ, அவனையே தரித்திரி என்று அறிந்துகொள். (௪)

எவர்கள் புண்ணிய வான்களோ அவர்களுடைய அடையாளம் சொல்லு? எவனுடைய இதயத்தில் ஈஸ்வரபயம் இருக்கிறதோ, அவனே புண்ணியவான் என்று அறி. (௫)

172683